[1972 ஆகஸ்ட் 11

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 67 . . . .*

THIRUMATHI T. N. ANANDANAYAKI : I have been asking for a question for quite some time. I think the table light there is hiding me and as such I am not able to catch the eye of the Hon. Deputy Speaker.

MR. DEPUTY SPEAKER : The hon. Member can put her question.

*திருமதி த. ந. அனந்தநாயகி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக நகராட்சி மன்றங்களிலே கிடைக்கிற நிதிகள் ஒழுங்காக யாருக்குப் போய்ச் சேரவேண்டுமோ அவர்களுக்குப் போய்ச் சேருவதில்லை என்ற புகார்கள் மக்களிடையே நிறைய இருந்து வருகின்றன. எனவே, பொதுவாக ஒரு குழுவை அமைத்து எப்படி யெல்லாம் நிதி எங்கெங்கே போய்ச் சேருகிறது, சேர வேண்டியவர்களுக்குச் சேருகிறதா என்பதை யெல்லாம் ஆராய்வதற்காக ஒரு குழுவை அமைக்க அரசாங்கம் முன்வருமா ?*

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்பொழுது அவையெல்லாம் கவனிக்கப்படுகிறது. ஆனால் தனிக் குழு அமைக்கப்பட்டிருக்கிறதா என்ற விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் சொல்லலாம்.*

### Export of 'Illmenite'

* 67 *Q*.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether Illmenite sand, a rare earth mineral is allowed to be exported to Japan and other Western Countries from Tuticorin; and

(*b*) if so, the details of the same ?

*மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) தூத்துக்குடித் துறைமுகத்தி லிருந்து ஐக்கிய அரசு (யூ. கே.)க்கு மட்டும் தான் 'இல்மெனைட்' ஏற்றுமதியாகி யுள்ளது.*

*(இ) 1969-70, 1970-71 ஆகிய ஒவ்வொரு ஆண்டிலும் 10,000 கிலோ கிராம் அளவுள்ள ரூ. 1,350 மதிப்புள்ள இல்மெனைட் ஏற்றுமதியாகியுள்ளது.*

1972 ஆகஸ்ட் 11]

**திரு. என். கே. பழனிசாமி :** இதில் நம்முடைய சர்க்காருக்கு எவ்வளவு வருமானம் கிடைக்கிறது? இதைப் பயன்படுத்தி இங்கேயே தொழிற்சாலைகள் ஆரம்பிக்க அரசு முயற்சி யெடுத்திருக்கிறதா? மத்திய சர்க்காருக்கு இதுபற்றி வற்புறுத்திச் சொல்லப்பட்டிருக்கிறதா? அப்படி என்றால் அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்தப் பொருள்களை எடுக்கும் பொழுது, நமக்கு மைனிங் லைசென்ஸ்க்காகக் கிடைக்கின்ற வருமானம்தான் கிடைக்கிறது. ஏற்றுமதி மூலம் கிடைக்கின்ற வருமானம் எல்லாம் மத்திய அரசுக்குத்தான் போய்ச் சேருகிறது. இல்மெனைட், டைட்டேனியம் சம்பந்தபட்ட பொருள் களைத் தயாரிப்பதற்காக இந்தியன் ரேர்எர்த்ஸ் கம்பெனியை—மத்திய அரசாங் கத்தினுடைய கம்பெனியை கேட்டிருக்கிறோம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, இந்த இந்தியன் ரேர்எர்த்ஸ் கம்பெனி நம்முடைய அரசாங்கத்தை அணுகி எலக்ட்ரிசிடி கன்செஷன் ரேட்டிலே தரவேண்டுமென்று ஏதாவது வினாக்கள் எழுப்பியிருக் கிறதா? அப்படி யென்றால் என்ன நடவடிக்கை அதன்மேல் எடுக்கப்பட்டிருக் கிறது? நான் கேள்விப்படுகிற வரையிலே கேரள அரசாங்கத்தில் முன்பு சவரையிலிருப்பதை மணவாளக்குறிச்சிக்கு மாற்ற வேண்டுமென்று சொல்லப் பட்டு வந்தது. அதைப்பற்றி அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக் கிறது?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இதை இங்கே பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற நல்ல கருத்தை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறியதை வரவேற்கிறேன். அந்தத் தொழிற்சாலைக்குக் குறைந்த விலையில் மின்சாரம் கொடுக்க வேண்டுமென்று அவர்கள் சொல்லியது பாராட்டுக்குரியது. இது பற்றி நம்முடைய முதலமைச்சர் அவர்களால் அடாமிக் எனர்ஜி கமிஷ னுடைய தலைவருக்கு, மின்சாரம் குறைவான விலைக்குக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்று தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. தமிழ்நாட்டிலே கன்னியா குமரி மாவட்டத்திலே இந்தத் தொழிற்சாலை வரவேண்டுமென்று வற்புறுத்தப் பட்டிருக்கிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** இல்மெனைட், மோனோசைட், போன்ற பொருட்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் மணவாளக்குரிச்சியில் ஏராளமாகக் கிடைக் கின்றன. இவற்றை நாம் அயல்நாடுகளுக்கு அனுப்பிக் கொண்டு இருக்கிறோம். அங்கிருந்து பல்வேறு பொருள்கள் செய்து நமக்கு அனுப்பிக் கொண்டிருக் கிறார்கள். நாம் வாங்கிக் கொண்டிருக்கிறோம். இதுபோன்ற மூலப்பொருட்களைக் கொண்டு என்ன என்ன பொருட்கள் செய்வதற்கான பேக்டரியை இங்கேயே

ஏற்படுத்த வேண்டுமென்று இந்த அரசு மத்திய அரசாங்கத்தை அணுகியிருக்கிறதா? இல்லை யென்றால் இனிமேலாவது அதைப்பற்றி நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இப்பொழுதுதான் அதற்குப் பதில் அளித்தேன்.

## முந்திரித் தொழிற்சாலை

*68 வினு—திரு. செ. சதாசிவம்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் அரசாங்கத்தாலும் பொதுமக்களாலும் ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் முந்திரி சாகுபடி செய்யப்படுவதால் அந்த ஜில்லாக்களில் ஏதாவது ஒரு இடத்தில் முந்திரிக் கொட்டை உடைக்கும் தொழிற்சாலையும் உடைக்கப்பட்ட முந்திரி தோலிலிருந்து எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலையும் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆம் எனில், அவைகள் எப்போது ஆரம்பிக்கப்படும்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) & (இ) தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள பண்ணுருட்டியில் இரண்டு நவீன முந்திரி தொழிற்சாலைகள் அமைக்கும் சாத்தியக்கூறு பற்றி தமிழ்நாடு விவசாய தொழில் கழகம் மத்திய அரசு சிறு தொழில் பணிமனை இயக்குநருடனும், தமிழ்நாடு தொழில் வணிகத்துறை இயக்குநருடனும் கலந்து ஆராய்ந்து வருகிறது. விஷயம் இன்னும் ஆரம்ப நிலையிலேயே இருந்து வருகிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சார், எத்தனை நாட்களுக்கு இந்த ஆராய்ச்சி நடக்கும்? எப்பொழுது துவங்கப்படும்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** விரைவிலேயே முடிக்கப்படும்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, கன்னியாகுமரி ஜில்லாவில் முந்திரிக் கொட்டை உடைக்கும் பல தொழிற்சாலைகள் இப்பொழுது இயங்கிக் கொண்டு இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விளக்கம் கொடுக்காதீர்கள், கேள்வியாகக் கேளுங்கள்.